செ.வெ.எண்-64 நாள்-26.03.2020

**அரியலூர் மாவட்டம்**

**தனியா இருக்கும் முதியோர்கள் தங்களுக்கு மருந்து பொருட்கள், உணவு பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தேவைக்கு கட்டுப்பாட்டு அறையினை தொடர்பு கொள்ளலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

அரியலூர் மாவட்டத்தில் பிப்ரவரி 15ஆம் தேதி முதல் வெளிநாடுகளிலிருந்து இதுநாள் வரை 1259 பயணிகள் வருகை புரிந்துள்ளனர். இவர்களை மாவட்டத்திலுள்ள கட்டுப்பாட்டு அறையிலுள்ள மருத்துக்குழு மூலம் தினந்தோறும் அவர்களை தொலைபேசியின் மூலம் தொடர்பு கொண்டு அவர்களின் உடல்நிலை குறித்து கேட்டறிந்து வருகின்றன. மேலும், அவர்களின் இல்லத்தில் கொரோன தொற்று உள்ளே நுழையாதே தனிமைப்படுத்தப்பட்ட வீடு என்ற வாசகங்கள் அடங்கிய ஒட்டும் வில்லைகள் ஒட்டப்பட்டு வருகிறது.

ஒவ்வொருவரும் எப்படி இருக்க வேண்டும் என்பதை அறிந்து செயல்படுவது காலத்தின் கட்டாயம். கொரோனா வரைஸ் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நேரடியாகவும், கைகள் மூலமும் பரவுகிறது. தமிழ்நாடு அரசு இந்நோய் பரவாமல் தடுப்பதற்கு, பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது. அம்மா உணவகத்தின் மூலம் சூடான சுகாதாரமான உணவு, தொடர்ந்து வழங்கப்படும். அரசு மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது, உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பும் மிக மிக அவசியம்.

வெளிநாடுகளிலிருந்து வந்துள்ளவர்கள் அவர்களாகவே முன்வந்து தங்களை வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள். தனிமைப்படுத்துதல் என்பது உங்களையும், உங்கள் குடும்பத்தினையும் சமுதாயத்தையும் நாட்டையும் பாதுகாக்கத்தான். மக்களுக்கு தேவையான, அத்தியாவசியப் பொருட்களான காய்கறிகள், பால், இறைச்சி, மருந்துகள் மற்றும் மளிகைப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மக்கள் யாரும் அச்சம் கொள்ள வேண்டாம். அடிக்கடை கைகளை சுத்தமாக கழுவுங்கள், கூட்டம் கூடுவதை தவிர்த்திடுங்கள்.

அரியலூர் மாவட்டத்திலுள்ள கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வீட்டில் தனியாக உள்ள உதவிக்கு யாரும் இல்லாத முதியோர்கள் தங்களுக்கு மருந்து பொருட்கள், உணவு பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தேவைக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் **24 மணி நேரமும்** செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறைக்கு **1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், 04329 - 228709 மற்றும் அலைபேசி எண். 99523 36840 என்ற** எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். பொதுமக்கள் அருகிலுள்ளவர்களுக்கு காய்ச்சல் ஏதேனும் அறியப்பட்டாலோ மாவட்ட நிர்வாகத்திற்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**